வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

தேதி 04.04.2025 நேரம் மாலை 6.10 மணி

---

<u>தலைப்புச் செய்திகள்</u>

- ஒட்டுமொத்த உலகின் நன்மைக்கான பிம்ஸ்டெக் கூட்டமைப்பை மேலும் வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை, பிம்ஸ்டெக் உச்சி மாநாட்டில், பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தி உள்ளார்.
- பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, தமது 2 நாள் தாய்லாந்து பயணத்தை முடித்துக் கொண்டு, இலங்கை செல்கிறார்.
- இரண்டாம் கட்ட துடிப்பான கிராமங்கள் திட்டத்தை, மொத்தம் 6 ஆயிரத்து 839 கோடி ரூபாய் செலவில் அமல்படுத்த, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- வக்ஃபு திருத்த மசோதா, நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு இருப்பது, வரலாற்றுச் சிறப்பு மிக்கது என்று, மத்திய உள்துறை அமைச்சர் திரு, அமித் ஷா கூறியுள்ளார்.

-------------------------

<u>மோடி பிம்ஸ்டெக் 1 (12)</u>

ஒட்டுமொத்த உலகின் நன்மைக்கான அமைப்பாக திகழும் பிம்ஸ்டெக் கூட்டமைப்பை, மேலும் வலுப்படுத்தி, பிம்ஸ்டெக் நாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பை, இன்னும் ஆழப்படுத்த வேண்டியதன் அவசியத்தை, பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தி உள்ளார். பேங்காக்கில் இன்று நடைபெற்ற, 6ஆவது பிம்ஸ்டெக் உச்சி மாநாட்டில் அவர் பேசுகையில், ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான 21 அம்ச செயல் திட்டம் ஒன்றையும் வெளியிட்டார். பிம்ஸ்டெக் நாடுகளுக்கு இடையே, வர்த்தக சபை அமைக்கப்படும் என்றும், ஆண்டுதோறும்

பிம்ஸ்டெக் வர்த்தக மாநாடு நடத்தப்படும் என்றும் அவர் அறிவித்தார். பிம்ஸ்டெக் பிராந்தியத்தில், உள்ளூர் நாணயத்தின் அடிப்படையில், வர்த்தக பரிவர்த்தனைகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்களை ஆராய வேண்டும் என்றும், அவர் கூறினார். பிரதமரின் உரை குறித்து கூடுதல் விவரங்கள்....

(வாய்ஸ்)

***மோடி பிம்ஸ்டெக்*** 2 (16)
(வாய்ஸ்)

2030ஆம் ஆண்டிற்கான, பிம்ஸ்டெக் தொலை நோக்கு ஆவணம் மாநாட்டில் ஏற்கப்பட்டு இருப்பதையும், பிம்ஸ்டெக் கடல்சார் போக்குவரத்து உடன்பாடு இறுதியாகி உள்ளதையும் பிரதமர் திரு. நரேந்திர மோடி வரவேற்றார். தகவல் தொழில்நுட்ப வாய்ப்புகளை முழுமையாக பயன்படுத்தி, பிம்ஸ்டெக் பிராந்தியத்தை வலுவான தொழில்நுட்ப மண்டலமாக மேம்படுத்த முடியும் என்று அவர் கூறினார். அண்மையில் மியான்மர் மற்றும் தாய்லாந்தில் நிலநடுக்கம் ஏற்பட்டதை பிரதமர் சுட்டிக் காட்டி, பேரிடர் மேலாண்மைத் துறையிலும் பிம்ஸ்டெக் நாடுகளுக்கு இடையே ஒத்துழைப்பு மேம்பட வேண்டும் என்றார். பிம்ஸ்டெக் நாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பை, விண்வெளித் துறை வரை நீட்டித்து, பிராந்தியத்தின் பாதுகாப்பை வலுப்படுத்தலாம் என, அவர் கூறினார். போதி முன் முயற்சித் திட்டத்தின் கீழ், ஆண்டுதோறும் பிம்ஸ்டெக் நாடுகளைச் சேர்ந்த 300 இளைஞர்களுக்கு, இந்தியாவில் பயிற்சி அளிக்கப்பட உள்ளதாக பிரதமர் தெரிவித்தார். பிம்ஸ்டெக் பாரம்பரிய இசைத் திருவிழா, இந்தியாவில் இவ்வாண்டு நடத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

-------------------------

மோடி இருதரப்பு 1 (16)

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று பேங்காக்கில், பிம்ஸ்டெக் உச்சி மாநாட்டின் நிகழ்வுகளுக்கு இடையே, நேபாள பிரதமர் திரு. கே.பி ஷர்மா ஒலி, மியான்மர் சீனியர் ஜெனரல் மின் ஆங் லெயிங், பங்காளதேஷ் நாட்டின் தலைமை ஆலோசகர் திரு. முகமது யூனுஸ், உள்ளிட்ட தலைவர்களை, இருதரப்பு ரீதியில் சந்தித்து பேசினார்.

ஸ்திரமான, அமைதியான, முற்போக்கான ஜனநாயக பங்களாதேஷ் ஒன்றை, இந்தியா தொடர்ந்து ஆதரிக்கும் என அவர் தெரிவித்தார். இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகளில், மக்களை மையமாக கொண்ட அணுகுமுறையில்தான், இந்தியா நம்பிக்கை கொண்டுள்ளதாக அவர் கூறினார். எல்லைப் பகுதிகளில், சட்ட விதிகளை கடுமையாக அமல்படுத்தி, ஊடுருவல் முயற்சிகளை தடுக்க வேண்டியதன் அவசியத்தையும் பிரதமர் இந்த சந்திப்பின் போது வலியுறுத்தினார். வங்கதேசத்தில், இந்துக்கள் உட்பட சிறுபான்மையினரின் பாதுகாப்பு உள்ளிட்ட இந்தியாவின் கவலைகளையும், பிரதமர் எடுத்துக் கூறியதாக, வெளியுறவுச் செயலர் திரு. விக்ரம் மிஸ்ரி, பின்னர் பேங்காக்கில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

மோடி இருதரப்பு 2 (13)

மியான்மரில் நில நடுக்கத்தால் ஏற்பட்ட உயிர் மற்றும் உடைமை சேதம் குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்தார். நெருக்கடியான இத்தருணத்தில், மியான்மர் சகோதர-சகோதரிகளுக்கு, இயன்ற எல்லா உதவிகளையும் இந்தியா வழங்கி வருவதாக அவர் கூறினார். போக்குவரத்துத் தொடர்புகள், உள்கட்டமைப்பு உள்ளிட்ட துறைகளில், இந்தியாவிற்கும், மியான்மருக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள் குறித்தும் இருதரப்பு சந்திப்பின் போது விவாதிக்கப்பட்டது.

இந்தியா-நேபாள் உறவுகளுக்கு இந்தியா மிகுந்த முன்னரிமை அளிப்பதாக, நேபாள பிரதமர் உடனான சந்திப்பு குறித்து, சமூக

ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவில், பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். எரிசக்தி, கலாச்சாரம், டிஜிட்டல் தொழில்நுட்பம் உள்ளிட துறைகளில்இருதரப்பு உறவுகளின் பல்வேறு அம்சங்கள் குறித்து, இந்த சந்திப்பின் போது முக்கியமாக விவாதிக்கப் பட்டது.

-------------------------

<u>மோடி இலங்கை (10)</u>

பிம்ஸ்டெக் மாநாட்டை தொடர்ந்து, பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று தமது 2 நாள் தாய்லாந்து பயணத்தை முடித்துக் கொண்டு, இலங்கை செல்கிறார். இலங்கைக்கான 3 நாள் பயணத்தில், அந்நாட்டு அதிபர் திரு. அனுரா குமார திசநாயகே-வை அவர் சந்தித்து, இருதரப்பு பேச்சு வார்த்தை நடத்த இருக்கிறார். பிரதமர் திரு. நரேந்திர மோடியின் பதவி காலத்தில், இது அவரது 4ஆவது இலங்கை பயணமாகும். இந்தியாவிற்கும், இலங்கைக்கும் இடையே, வரலாறு, மதம், கலாச்சாரம், மக்கள் நிலையிலான தொடர்புகள் உட்பட, பல்வேறு துறைகளில் ஆழமான உறவு இருப்பதும், இலங்கை அதிபர் திரு. திசநாயகே, பதவியேற்புக்கு பிந்தைய முதலாவது வெளிநாட்டுப் பயணமாக இந்தியாவிற்கு வருகை புரிந்ததும், குறிப்பிடத்தக்கது.

-------------------------

<u>மோடி நவராத்திரி (5)</u>

சைத்ர நவராத்திரி பண்டிகையின் 7ஆம் நாளான இன்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாட்டு மக்களுக்கு, ஜகதம்பா தேவியின் அருளாசிகளை வேண்டியுள்ளார். பக்தர்களின் வாழ்வில், மகிழ்ச்சியின் புதிய விடியலை, ஜகதம்பிகா தேவி கொண்டு வந்து சேர்க்கட்டும் என்று, சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவில், பிரதமர் கூறியுள்ளார்.

-------------------------

அமைச்சரவை (15)

இரண்டாம் கட்ட துடிப்பான கிராமங்கள் திட்டத்தை, 100 சதவிகிதம் மத்திய நிதி ஆதரவுடன், மொத்தம் 6 ஆயிரத்து 839 கோடி ரூபாய் செலவில் அமல்படுத்த, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு.அஷ்வினி வைஷ்ணவ், இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் இதை தெரிவித்தார். மொத்தம் 18 ஆயிரத்து 658 கோடி ரூபாய் மதிப்பிலான, 4 ரயில்வே திட்டங்களுக்கும், மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்து இருப்பதாக அவர் கூறினார். இத்திட்டங்களின் கீழ், மஹாராஷ்டரா, ஒடிசா, சத்தீஸ்கர் ஆகிய 3 மாநிலங்களுக்கு உட்பட்ட 15 மாவட்டங்களில், மொத்தம் ஆயிரத்து 247 கிலோ மீட்டர் நீளத்திற்கு புதிய ரயில் பாதைகள் அமைக்கப்படும் என்றும், மொத்தம் 379 லட்சம் மனித நாள் அளவிற்கு நேரடி வேலை வாய்ப்புகள் இதனால் உருவாகும் என்றும் அவர் தெரிவித்தார். மக்களுக்கான போக்குவரத்து வசதிகள், மற்றும், பயணச் செலவை குறைப்பதுடன், எண்ணெய் இறக்குமதி செலவு மற்றும், கார்பன் வெளியீட்டை குறைக்கவும், இத்திட்டங்களால் ஏதுவாகும் என்று அமைச்சர் மேலும் கூறினார்.

-------------------------

வக்ஃபு அமித் ஷா (15)

வக்ஃபு திருத்த மசோதா, நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு இருப்பது, வரலாற்று சிறப்புமிக்கது என்று, மத்திய உள்துறை அமைச்சர் திரு, அமித் ஷா கூறியுள்ளார். நீண்டகாலமாக நிலவிய அநீதி மற்றும் ஊழல் யுகத்திற்கு முடிவு கட்டி, சமத்துவம் மற்றும் நீதியின் அடிப்படையிலான புதிய யுகத்திற்கு வழிகோலும் வகையில், இம்மசோதா அமைந்து இருப்பதாக, இன்று சமூக ஊடகத்தில் அவர் கூறியுள்ளார். வக்ஃபு திருத்த மசோதாவினால், வக்ஃபு வாரியங்கள் மற்றும் சொத்துக்களின் நிர்வாகத்தில், பொறுப்புணர்வும், வெளிப்படைத் தன்மையும் அதிகரித்து, முஸ்லீம் சமூகத்தைச் சேர்ந்த ஏழைகள், பெண்கள்

மற்றும் குழந்தைகள் பயன்பெறுவார்கள் என்று தெரிவித்துள்ளார். முக்கியமான இந்த மசோதாவை நிறைவேற்றியதற்காக, பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ ஆகியோருக்கு, உள்துறை அமைச்சர் நன்றி தெரிவித்துக் கொண்டுள்ளார். மசோதாவிற்கு ஆதரவு அளித்த அனைத்து கட்சிகள் மற்றும் எம்பிக்களுக்கும் அவர் நன்றி கூறியுள்ளார்.

-------------------------

ரிஜிஜூ (9)

இன்று முடிவடைந்த நாடாளுமன்றத்தின் பட்ஜெட் கூட்டத் தொடர் மிகவும் பயனுள்ள விதத்தில் அமைந்ததாக, நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வக்ஃபு திருத்த மசோதா மீதான விவாதங்களின் போது, ஒரு முறை கூடத் தடையிருக்க வில்லை என்றும், நாடாளுமன்றத்தின் வரலாற்றில், இவ்வளவு அதிக விவாதங்கள், ஒருபோதும் இடம் பெற்றதில்லை என்றும் கூறினார். பட்ஜெட் கூட்டத் தொடரின் போது, மக்களவையில் 16 மசோதாக்களும், மாநிலங்களவையில் 14 மசோதாக்களும் நிறைவேற்றப் பட்டதாக அமைச்சர் தெரிவித்தார்.

-------------------------

புதுச்சேரி □றவை (10)

புதுச்சேரியில், ஊசுடு ஏரி, பாகூர் ஏரி, மற்றும், அரியாங்குப்பம் அலையாத்திக் காடுகளுக்கு வரும் பறவைகளின் எண்ணிக்கை குறித்து, பறவை ஆராய்ச்சியாளர் பூபேஷ் குப்தா தலைமையில், கல்லூரி மாணவர்கள் மூலம், கடந்த மார்ச் மாதம் நடத்தப்பட்ட கணக்கெடுப்பில், 86 வகையான 2 ஆயிரத்து 343 பறவைகள், ஒரே நாளில் புதுச்சேரிக்கு வருகை புரிந்து இருப்பதாக தெரியவந்துள்ளது. வனத் துறை பாதுகாப்பு அதிகாரி திரு. அருள்குமார், இன்று புதுச்சேரியில், கணக்கெடுப்பு அறிக்கையை

வெளியிட்டு பேசுகையில் இதை தெரிவித்தார். பறவைகள் வரத்து காரணமாக, மீன்களின் பெருக்கம் சமன்படும் என்றும், நிலத்தடி நீர் மற்றும் மேல்பரப்பு நீரின் தரம் மேம்படும் என்றும் அவர் கூறினார். திரு. அருள் குமார் மேலும் கூறுகையில்......

(வாய்ஸ்)

-------------------------

<u>*ரயில் மாற்றம்* (11)</u>

திருச்சிராப்பள்ளி ரயில்வே கோட்டத்தில் பொறியியல் பணிகள் காரணமாக, ரயில் சேவையில் சில மாற்றங்கள் அறிவிக்கப் பட்டுள்ளன. இதன்படி, வரும் 9, 16 ஆகிய தேதிகளில், சென்னை எழும்பூர்-புதுச்சேரி M-E-M-U ரயில், சென்னைக்கும், விழுப்புரத்திற்கும் இடையில் மட்டுமே இயக்கப்படும். புதுச்சேரி-திருப்பதி M-E-M-U எக்ஸ்பிரஸ் ரயில், புதுச்சேரிக்கு பதிலாக, முண்டியம்பாக்கத்தில் இருந்து இயக்கப்படும். இதே தேதிகளில், புதுச்சேரி–ஹௌரா அதிவிரைவு ரயில், வழக்கமான நேரத்திற்கு 50 நிமிடம் தாமதமாக, பிற்பகல் மணி 3.05க்கு, புதுச்சேரியில் இருந்து புறப்படும். இது அல்லாது, வரும் 9 மற்றும் 16ஆம் தேதிகளில், சோழன் எக்ஸ்பிரஸ், குருவாயூர் எக்ஸ்பிரஸ் ரயில்களின் புறப்பாட்டு நேரத்திலும் மாற்றம் அறிவிக்கப் பட்டுள்ளது.

-------------------------

<u>*□ல்கலைக்கழகம்* (7)</u>

புதுச்சேரி பல்கலைக் கழகத்தின் நிகழ்கலைத் துறை, சங்கமம் குளோபல் அகாடமியுடன் இணைந்து, கலை-இலக்கியம் மற்றும் நிகழ்கலைகள் குறித்து, ஒருநாள் சர்வதேச மாநாடு ஒன்றை நடத்தியது. தொடக்க விழாவில், தென்னிந்தியாவிற்கான இலங்கை துணை தூதரகத்தைச் சேர்ந்த, வர்த்தகத் துறை அமைச்சர் திரு. ஜி.எல் ஞானதேவா, விழா மலலை வெளியீட்டார். 4 நாடுகளில் இருந்து, 40 பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டு, நிகழ்கலைகள் குறித்து ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்தனர்.

-------------------------

<u>ஐபிஎல் (4)</u>

ஐபிஎல் கிரிக்கெட்டில், இன்று இரவு 7.30 மணிக்கு, லக்னோவில் நடைபெறும் போட்டியில், லக்னோ-மும்பை அணிகள் மோத உள்ளன. நேற்று இரவு கொல்கத்தாவில் நடைபெற்ற போட்டியில், கொல்கத்தா அணி, 80 ரன் வித்தியாசத்தில், ஐதராபாத் அணிக்கு எதிராக வெற்றி பெற்றது.

-------------------------

<u>மனோஜ் குமார் (9)</u>

தாதாசாகேப் பால்கே விருது பெற்ற முதுபெரும் இந்தி திரைப்பட நடிகர் மனோஜ்குமார், மும்பையில் இன்று அதிகாலை காலமானார். சிறிது காலமாக நோய்வாய் பட்டிருந்த அவருக்கு வயது 87. 1965ஆம் ஆண்டு, பகத் சிங் வாழ்க்கை வரலாறு பற்றிய ஷாகீத் படத்தில் நடித்து புகழ்பெற்ற மனோஜ் குமார், தொடர்ந்து, தேசப் பற்றை வலியுறுத்தும் வகையிலான பல படங்களில் நடித்து, பாரத் குமார் என்றே பெயர் பெற்றவர் ஆவார். மனோஜ் குமார் மறைவு குறித்து, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி, மஹாராஷ்ட்ர முதலமைச்சர் திரு. தேவேந்திர பட்நவிஸ் உட்பட, தலைவர்கள் பலரும் துயரம் வெளியிட்டுள்ளனர்.

-------------------------

<u>நிதி ஆயோக் (8)</u>

உள்ளூர் அளவிலான வளர்ச்சிப் பணிகளை தீட்டமிடுவதில், பருவநிலை மாற்றத்தை கட்டுப்படுத்தும் நோக்கத்திற்கு முக்கிய இடம் அளிப்பது குறித்து, நிதி ஆயோக் இன்று புதுடெல்லியில், தேசிய அளவிலான பயிலரங்கு ஒன்றை நடத்தியது. கொள்கை வகுப்பாளர்கள், பருவநிலை நிபுணர்கள், மற்றும், சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டு, பருவநிலை மாற்றத்தை திறம்பட்ட முறையில்

எதிர்கொள்ளத் தேவையான அறிவுசார் ஆதாரங்கள் மற்றும் கருவிகளை, பஞ்சாயத்து அமைப்புகளுக்கும் வழங்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர்.

-------------------------

*□ழங்குடியினர்* (13)

பழங்குடி சமூகத்தினர், சமூக-பொருளாதார ரீதியில் முன்னேற ஏதுவாக, கல்வியில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும் என, மத்திய பஞ்சாயத்து ராஜ் இணையமைச்சர் பேராசிரியர் எஸ்.பி சிங் பகேல் கூறியுள்ளார். பழங்குடி தலைவர் பீர்சா முண்டாவின் 150ஆம் ஆண்டு பிறந்தநாளை ஒட்டி, பஞ்சாயத்து ராஜ் அமைச்சகமும், ஜார்கண்ட் மாநில அரசும் இணைந்து, நமது பாரம்பரியம்-நமது மரபுகள் என்ற தலைப்பில், புதுடெல்லியில் இன்று நடத்திய நிகழ்ச்சியில் அவர் உரையாற்றினார். நாட்டின் கலாச்சார மற்றும் நிர்வாகக் கட்டமைப்பில், பழங்குடி மரபுகளை ஒருங்கிணைக்கும் நோக்கில் ஏற்பாடு செய்யப் பட்டிருந்த, தேசிய அளவிலான இந்நிகழ்ச்சியில், ஜார்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த 500க்கும் மேற்பட்ட பழங்குடி பிரதிநிதிகள் மற்றும் தலைவர்கள் கலந்து கொண்டனர். பாதுகாப்புத் துறை இணையமைச்சர் திரு. சஞ்சய் சேத் உள்ளிட்டவர்களும் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

-------------------------